# வானவில்

VAANAVIL
ISSUE – 6 JUNE 2011

இதழ் - 6 ஆனி 2011


# யாழ்ப்பாண மாநகரசபையைச் சீர்குலைக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு முயற்சி!




யாழ்ப்பாண நகரத்தை இலங்கைத் தமிழ் மக்களின் புராதன கலாச்சாரத் தலைநகர் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவதுண்டு. நவீன வரலாற்றிலும் இலங்கையின் தலைநகர் கொழும்பு மற்றும் கண்டி என்பனவற்றுக்கு அடுத்ததாக யாழ்ப்பாணமே பெரிய நகரமாகும். இந்த நகரத்துக்கு அந்நியப் படையெடுப்பாளர்களான ஒல்லாந்தர், போர்த்துக்கீசர், பிரித்தானியர் என்போரால் மட்டுமின்றி, சுதேசியர்களான தமிழ் இனவாதிகளாலும் பல தடவைகள் ஆபத்துகள் ஏற்பட்டு வந்ததை அண்மைக்கால வரலாறும் எடுத்தியம்புகிறது. அது இப்பொழுது மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வடிவத்தில் அரங்கேற ஆரம்பித்துள்ளது.

யாழ்ப்பாண நகரத்தை ஒரு நவீன நகராகக் கட்டியெழுப்பியதில், அதன் மாநகரப் பிதாவாக இருந்த அல்பிரட் துரையப்பாவுக்கு முதலிடம் உண்டு. துரையப்பாவின் ஞாபகார்த்தமாக நவீன சந்தை, பஸ் நிலையம், துரையப்பா ஸ்ரேடியம், திறந்த வெளியரங்கு, குடிநீர்த்திட்டங்கள், சுகாதார நிலையங்கள், மின்சாரம், வீதி அபிவிருத்தி உட்பட பெருந்தொகையான திட்டங்கள் திகழ்கின்றன. துரையப்பா யாழ் நகர மக்களுக்குச் செய்த தன்னலமற்ற சேவை காரணமாக, அவரை ஒருமுறை யாழ்ப்பாணத் தொகுதி மக்கள் தமது சுயேட்சையான பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்தனர் என்றால், அவரது மக்கள் செல்வாக்கை அறிந்து கொள்ள முடியும்.

ஆனால் இந்த மக்கள் சேவை புரிந்த மாநகர பிதாக்கள் வரிசையில், தமிழரசுக் கட்சியினதோ அல்லது தமிழ் காங்கிரஸ் கட்சியினதோ மாநகர முதல்வர்களைக் காணவே முடியாது. அந்த முதல்வர்களது மக்கள் பணியின் நினைவாக, யாழ் நகரில் எந்த நினைவுச் சின்னத்தையும் காண முடியாது. இதை அறிந்துதான் யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகத்தை அங்குள்ள மக்கள் தொடர்ச்சியாக துரையப்பாவிடம் கையளித்து வந்தனர்.

அல்பிரட் துரையப்பா உயிருடன் இருக்கும்வரை, தம்மால் தமிழர்களின் 'தலைநகரான' யாழ்ப்பாணத்தில் ஒன்றும் செய்ய முடியாது என்று கண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினர், அவர் மீது துரோக முத்திரை குத்தி பிரச்சாரத்தில் ஈடுபட்டதுடன், அவரை பிரபாகரன் தலைமையிலான குழுவினர் மூலம் 1975 ஜூலை மாதம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் வைத்துப் படுகொலை செய்வித்தனர். யாழ்ப்பாண மக்களின் அபிவிருத்தியைவிட, தமது அரசியல் சுயலாபம் முக்கியம் என்ற கீழ்த்தர நோக்கம் காரணமாகவே, தமிழர் வரலாற்றில் இந்த முதலாவது அரசியல் படுகொலையை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நடாத்தி முடித்தனர். 'வாள் எடுத்தவன் வாளால் அழிவான்' என்பது போல, பிற்காலத்தில் புலிகள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களையும் ஒழித்துக்கட்டியது இன்னொரு விடயம்.

பின்னர் சரித்திரம் மாறி, புலிகள் தமிழ் மக்களின் தலைமையை பலவந்தமாக அபகரித்த பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணி இரண்டாக

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**தொடர்பு முகவரி:**

'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

sunvaanavil@gmail.com

# இலங்கைத் தமிழர்களை படுகுழியில் தள்ளும் தமிழக முதலமைச்சரின் விபரீதப்போக்கு !

**வானவில்**

*தமிழ் நாட்டில் அண்மையில் நடந்த தேர்தலின் பின்னர் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட அதிமுக தலைவி ஜெயலலிதா ஜெயராம் எடுத்துவரும் நடவடிக்கைகள், 30 வருட யுத்தத்தால் சகல வழிகளிலும் பாதிப்புக்குள்ளாகி நிற்கும் இலங்கைத் தமிழ் மக்களை, மேலும் மோசமான ஒரு நிலைக்கு இட்டுச்சென்று விடுமோ என்ற அச்சம் அம்மக்களிடையே ஏற்பட்டுள்ளது.*

*தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை வைத்து பிழைப்பு நடாத்தி வரும் பிழைப்புவாத அரசியல் கட்சிகள் போலல்லாது, ஜெயலலிதா கடந்த காலங்களில் ஓரளவு நிதானமான போக்கைக் கடைப்பிடித்து வந்தவர். விடுதலைப் புலிகளுடைய நாசகார நோக்கங்களையும், இலங்கைத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் வேறுபடுத்திப் பார்த்தவர். ஆனால் இப்பொழுது அதற்கு முற்றிலும் நேர்மாறான ஒரு போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளார்.*

*அவரது இந்தத் தவறான போக்கு தமிழகத் தேர்தலுக்கு முன்னரே ஆரம்பித்துவிட்டது. அப்பொழுது அவரது போக்கை, உலகத் தமிழினத்தின் தலைவராகத் தன்னை உருவகப்படுத்தி வந்த தி.மு.க தலைவர் மு.கருணாநிதியை ஓரம் கட்டுவதற்காகவும், தனது கூட்டிலிருந்த தீவிர புலி ஆதரவாளரான வை.கோபாலசாமியை கழற்றி விட்டதை ஈடு செய்வதற்காகவும், மேற்கொள்ளும் ஒரு தந்திரோபாயமாகத்தான் பலரும் கருதினர்.*

*ஆனால், தேர்தலில் அமாக வெற்றி பின்னர், அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்த முதலாவது கருத்தில், 'இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை ஒரு போர்க்குற்றவாளியாக சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும்' என்று கூறியமை, அவரது தவறான போக்கின் நீட்சியை எடுத்துக் காட்டியது. அதைத் தொடர்ந்து, இலங்கை மீது இந்திய அரசு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று அவர் சட்டசபையில் மேற்கொண்ட தீர்மானமும், கச்சதீவை 'மீட்க வேண்டும்' என நிறைவேற்றிய தீர்மானமும் அவரது மிக மோசமான நிலைப்பாட்டின் தொடர்ச்சிகளாகும். இந்தத் தீர்மானங்களுக்கு இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் உட்பட தமிழக சட்டசபையில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஆதரவு அளித்திருப்பது, தமிழகம் முற்றுமுழுதாக இலங்கைத் தமிழர்களைப் படுகுழியில் தள்ளத் தயாராகியிருப்பதையே எடுத்துக் காட்டுகிறது.*

*30 வருடகாலமாக யாராலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கொடூரமான போர் ஒன்றை நடாத்தி, ஒரு இலட்சத்துக்கும் மேலான மனித உயிர்களை அழித்து, (ஜெயலலிதாவே புலிகளின் கொலைப்பட்டியலில் இருந்தவர்தான்) பல கோடி பெறுமதியான சொத்துகளை நாசமாக்கி, தமிழினத்தை அனாதைகளாக்கிய புலிகளை முற்றுமுழுதாக அழித்து,*

*தமிழ் மக்கள் உட்பட இலங்கை மக்கள் அனைவரையும் யுத்தமற்ற ஒரு வாழ்க்கைக்கு அழைத்துச் சென்ற மகிந்த ராஜபக்ச அரசு செய்தது போர்க்குற்றமா அல்லது மனிதாபிமான நடவடிக்கையா என்பதை ஜெயலலிதா சிந்தித்துப் பார்க்க வேண்டும். கொலைகாரப் புலிகளை அழிக்காமலும், போரை முடிவுக்குக் கொண்டு வராமலும், முடிவில்லாமல் அழிவுகளைத் தொடர அனுமதிக்க வேண்டும் என்பதுதான் உங்கள் நிலைப்பாடா?*

*கச்சதீவு விவகாரத்தைப் பொறுத்தவரையிலும்கூட, தமிழக அரசியல்வாதிகளின் நிலைப்பாடு ஒருதலைப்பட்சமானதாகவும், நீதிக்கு அப்பாற்பட்டதாகவுமே இருந்து வருகிறது. இலங்கைத் தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் தமிழக அரசியல்வாதிகள், இலங்கையின் வடக்கு கிழக்குக் கரையோரங்களில் வாழும் தமிழ் மீனவர்களின் கடல் வளங்களைத் தொடர்ந்து சூறையாடிவரும் தமிழக மீனவர்களின் அடாத செயலைத் தடுத்து நிறுத்துவதற்குப் பதிலாக, கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டும் என கோசமிடுகின்றனர். இந்தியா மீளப்பெறுவதற்கு கச்சதீவு ஒன்றும் இந்தியச் சொத்து அல்ல என்பதை இந்த தமிழக அரசியல் கூத்தாடிகள் புரிந்துகொள்ள வேண்டும்.*

*கச்சதீவு வரலாற்றுக்காலம் முதல் இலங்கையின் இறைமைக்குட்பட்டது என்பதற்கு போதிய வரலாற்றுச் சான்றுகள் உண்டு. இலங்கையையும் இந்தியாவையும் ஒருங்குசேர ஆண்ட பிரித்தானிய விக்ரோறிய மகாராணி காலத்து வரைபடங்களில் இந்த உண்மையைக் காணமுடியும். கச்சதீவு, நெடுந்தீவு பிரதேசசபையின் ஒரு வட்டாரமாக நீணடகாலமாக இருந்து வருவதுடன், கச்சதீவு அந்தோனியார் கோவில் நெடுந்தீவு பங்குத் தந்தையின் நிர்வாகத்துக்குரியதாகவே நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண லாயக்கற்ற தமிழக அரசுகள், அம்மீனவர்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக போடும் வேசமே, கச்சதீவு மீட்புக் கோசம் என்பதை அம்மீனவர்களே நன்கறிவர்.*

*தமிழக அரசும் பிற அரசியல் கட்சிகளும் மேற்கொள்ளும் இந்தத் தவறான போக்கால், இலங்கைத் தமிழர்களுக்குத்தான் மேலும் துயரங்கள் பெருகும் என்பதை அவர்கள் புரிந்து கொள்வது அவசியம். அவர்களது இந்தப் போக்கால் சிங்களப் பேரினவாதிகள் தேவையில்லாமல் உசுப்பி விடப்படுவர். அதன் விளைவாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன், இலங்கை அரசு தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தமிழ் கட்சிகளுடன் மேற்கொண்டுவரும் பேச்சுவார்த்தை முயற்சிகளும் தடைப்படும். இதைத்தான் தமிழக முதலமைச்சரும், அங்குள்ள அரசியல்வாதிகளும் விரும்புகிறார்களா?*

*எனவே, தமிழக அரசையும் அரசியல்வாதிகளையும் நாம் வேண்டுவது என்னவெனில், தயவுசெய்து உங்கள் சொந்த அரசியல் இலாபங்களுக்காக இலங்கைத் தமிழர்களை பந்தாடுவதை இனியாவது விட்டுவிடுங்கள். உங்களைவிட இலங்கைத் தமிழர்களுக்கு தங்கள் பிரச்சினை என்னவென்பதும்,, அதை எவ்வாறு தீர்த்துக் கொள்வது என்பதும் நன்கு தெரியும். ஆகையால் இலங்கைத் தமிழர்களுக்கு நீங்கள் நல்லது செய்ய எண்ணினால், தயவுசெய்து அவர்களைத் தொந்தரவு பண்ணாமல் ஒதுங்கி நில்லுங்கள்.*

***– ஆசிரியர் குழு***

---

தத்துவம் என்றால் என்ன? எவற்றை எல்லாம் நடைமுறையில் மெய்ப்பித்துச் சாதிக்க விரும்புகிறோமோ, அவற்றைப் பற்றி நாம் பெற்றிருக்கும் ஞானம்தான் தத்துவம். தத்துவம் இல்லாமலும்கூட ஒருவன் இயங்கமுடியும் என்றாலும் அது வளர்ச்சியற்றது. காரணம், ஒன்றையே அவன் திரும்பத் திரும்ப செய்துகொண்டிருப்பான். அதே போல், தத்துவம் மட்டுமே பேசிக்கொண்டிருப்பவர்களாலும் பலனில்லை. கேட்போரை மயக்கும் வண்ணம் பேசினால் மட்டும் போதாது. மிகப் பெரிய ஆதரவு அலையைக் கூட்டினால் மட்டும் போதாது. எத்தனைப் புரட்சிகரமான தத்துவமாக இருந்தாலும், அது நடைமுறையைச் சார்ந்தே இருக்கவேண்டும். ஆக, தத்துவமும் நடைமுறையும் கட்டாயம் இணைந்திருக்கவேண்டும்.

**– எங்கெல்ஸ்**

---

# வளர்ச்சியடைந்த நாடுகளில் கடனுக்குள் வாழும் மக்கள்!

– சாமி –

"கனடியர்களுள் மூன்றிலொரு பங்கினருக்கு அடிப்படை வாழ்க்கைச் செலவுக்குப் போதிய பணம் கூட இல்லையென்பது, கணிப்பீடுகள் மூலம் தெரிய வந்துள்ளது. பத்தில் ஒன்றுக்கும் அதிகமானவர்கள் தமது பட்டியல் கொடுப்பனவுகளைக்கூட உரிய நேரத்தில் செய்வதில்லை என்றும் இந்தப் புதிய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கனடாவின் புள்ளிவிபரப் பிரிவினர் வெளியிட்டுள்ள ஆய்வு முடிவுகளிலேயே இது தெரிய வந்துள்ளது. கடந்த இரண்டரை வருட காலத்தில் கனடாவில் பண வீக்கம் மிகவும் உச்ச நிலையில் இருந்தது. ஒரு வருடத்திற்கு முந்தைய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை விட இது 3.3 வீதம் அதிகமாக இருந்தது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களுள் 30 வீதமானவர்கள் அடிப்படை வாழ்க்கைச் செலவுக்குக்கூட பணம் அற்றவர்களாகவே காணப்பட்டனர். 38 வீதமானவர்களிடம் சேமிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

54 வீதமானவர்களுக்கு பணம் ஒரு பெரும் போராட்டமாக அல்லது சாத்தியப்படாத ஒன்றாகக் காணப்படுகிறது. எரிபொருட்கள் முன்னைய ஆண்டைவிட 19 வீதம் அதிகரித்துள்ளது. உணவுப் பொருட்கள் 3.3 வீதம் அதிகரித்துள்ளன. மரக்கறி மற்றும் புதிய இறைச்சிக்கான விலைகள் 18.6 வீதமாக அதிகரித்துள்ளது."

இவ்வாறு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.



வளர்ச்சியடைந்த மேற்குலக நாடுகளின் நிலை இவ்வாறுதான் உள்ளது. மிகப் பெரும்பாலான மக்கள் நாளாந்தம் இரட்டிப்பு உழைப்பில் ஈடுபடுகின்ற போதும், கடன்களிலிருந்து மீள முடியாதவர்களாகவே உள்ளனர். மேலதிக செலவுகளை ஈடுகட்ட முடியாது, அவர்கள் கடன் அட்டைகளை (Credit Cards) நாடி மென்மேலும் கடனுக்குள் மூழ்குகின்றனர். மொத்தத்தில், 'கடனுக்குள் வாழ்தல்' என்பதே அவர்களது வாழ்வின் நியதியாகி விடுகின்றது.

உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படைத் தேவைகளைக் கவனிக்கும் நலன்புரி முறைகளை இந்நாடுகள் கொண்டிருந்தாலும், இந்நாடுகளின்

சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகள் பேணப்படுகின்ற, 'பாராளுமன்ற ஜனநாயகம்' ஊடாக மக்களுக்கான நலன் பேண் அரசுகள்' தங்களுடையவை என்று மார்தட்டுவதோடு, மூன்றாமுலக நாடுகளைத் தமது 'ஜனநாயக' முன்மாதிரிகளைப் பின்பற்றுமாறு வலியுறுத்தும் வளர்ச்சியடைந்த மேற்குலக நாடுகளின் நிலை இவ்வாறுதான் உள்ளது.

சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகள் பேணப்படுகின்ற, 'பாராளுமன்ற ஜனநாயகம்' ஊடாக மக்களுக்கான நலன் பேண் அரசுகள்' தங்களுடையவை என்று மார்தட்டுவதோடு, மூன்றாமுலக நாடுகளைத் தமது 'ஜனநாயக' முன்மாதிரிகளைப் பின்பற்றுமாறு வலியுறுத்தும் பொருளாதார ஒழுங்கிலான சமூக வாழ்க்கைக்கு இவை மட்டும் போதுமானவையல்ல.

இவ்வாறாயின் இந்நாடுகளில் கூறப்படும் பாராளுமன்ற ஜனநாயகமும், நலன்பேண் அரசுகளும் யாரைக் காப்பாற்றுகின்றன? பாதிப்புக்குள்ளாகி வாடும் இந்நாடுகளின் பெரும்பாலான மக்களும், 'வளர்ச்சியடைந்த நாடுகளின் மக்கள்' என்ற கவர்ச்சிப் பதத்திற்குள் அடங்குகிறார்களா? வளர்ச்சியடைந்த என்ற தகுதியும், கூறப்படும் பாராளுமன்ற ஜனநாயகம் தாங்கும் நலன்பேண் அரசுகளும் என்றும் தொடருமா? என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்த இடத்தில் 'வானவில்' மூன்றாவது இதழில் வெளியான, "மேற்கத்தைய அரசியல் மாதிரிகள்

பின்பற்றுவதற்கு ஏற்றவை அல்ல" – சீன மக்கள் தினசரி கூறுகிறது என்ற கட்டுரையை மீள் பார்வை செய்வது பொருத்தமானதாக இருக்கும்.

"……உலகாளாவிய உற்பத்தி மற்றும் விநியோகம் என்ற முறைமையின் கீழ் மூன்றாமுலக நாடுகளைச் சுரண்டியதின் மூலமே மேற்கத்தைய வளர்ச்சியடைந்த நாடுகள் திடீரென மிக அதிக இலாபத்தையும் வளர்ச்சியையும் பெற்றுள்ளன…

…..உள்ளார்ந்த நலன்களுக்கான மோதல்களைக் குறைப்பதற்காக, மேற்கு நாடுகள் உயர்ந்த கொடுப்பனவுகள் கொண்ட நலன்புரி முறைமைகளை ஸ்தாபித்து வைத்துள்ளன. ஆனால் இந்த நலன்புரி நிலைமைகள்,, உலகின் பல பாகங்களிலிருந்து அவர்கள் கொடூரமாகச் சுரண்டிய வளங்கள் மற்றும் பெரும் செல்வம் என்பவற்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளன….

…...இந்த செல்வமானது இல்லாமல் போகும்போது இவர்களால் கூறப்படும் தேர்தல் மற்றும் பல கட்சி முறைகளைப் பேணுவது கஸ்டமாகும்….

…..மேற்குலகின் இந்த கூறப்படும் ஜனநாயக அமைப்பு முறையும், சிவில் சமூகத்தின் செயல்பாடும் கொண்ட அடிப்படை இல்லாவிட்டால், அது வேகமாக வீழ்ச்சி கண்டு விடும்….

……ஒரு பன்மைத்துவ சமூகத்தில் நலன்களுக்கடையில் கடுமையான மோதல்கள் இருக்குமானால், தேர்தல்கள் தடைபட்டு தாக்கம் விளைவிப்பனவாக இருப்பதுடன், சமூக நலன்கள் நிச்சயமாக பலாத்கார வழியினுடாக மறுபங்கீடு செய்யப்படும்…

…..18ம் நூற்றாண்டின் பின்னர் மேற்கின் வளர்ச்சியடைந்த நாடுகளின் தொகை 20 ஐத் தாண்டவில்லை. இந்த அனைத்து நாடுகளினதும் மொத்த சனத்தொகை 1 பில்லியன் (100 கோடி) அல்லது உலக சனத்தொகையில் ஏழில் ஒரு பங்கு முதல் எட்டில் ஒரு பங்கு ஆகும். இந்த "பணக்கார மனிதர்களின் கிளப்"பின் எல்லை 100 கோடி மட்டுமே. ஏனெனில் காட்டுப்பாடில்லாத வாழ்க்கை முறைமையை சர்வ வியாபகமாக்குவதற்கு எந்தவொரு வழியும் இல்லை….."

வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசுகள், தமது பொருளாதார நெருக்கடிகளை மக்கள் மீது சுமத்துவதிலேயே கருத்தாயிருக்கின்றன. அது சமூக நலக் கொடுப்பனவுகளிலிருந்து, ஓய்வூதியம் வரை வெட்டுக்களை ஏற்படுத்துகின்றது. எனவே மக்கள் மறுபங்கீடு செய்வதற்காக திரளவே செய்வர். "பணக்கார மனிதர்களின் கிளப்"பின் நூறு கோடிக்குள்ளும், பல கோடிகளை வீதிக்குக் கொண்டு வந்து நிறுத்தி விடும்.
*

# பாலஸ்தீன விடுதலை இயக்கங்களுக்கிடையில் ஐக்கியத்துக்கான முயற்சிகள் முன்னெடுப்பு!

இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பாலஸ்தீனத்தின் விடுதலை இயக்கங்கள் மத்தியில் – குறிப்பாக பாலஸ்தீனத்தின் ஜனாதிபதிப் பதவியை வைத்திருக்கும் அல்பதாஹ் இயக்கத்துக்கும், அரசாங்கத்தை நிர்வகிக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையில் – நிலவும் முரண்பாடுகளே, அந்த மக்கள் இன்னமும் விமோசனமடையாமல் இருப்பதற்கான பிரதான காரணமாகும். ஆனால் தற்பொழுது அந்த நிலையை மாற்றுவதற்கு அங்கு செயல்படும் அனைத்து இயக்கங்களும் தீர்மானித்துள்ளன.

இதுசம்பந்தமான ஒரு புரிந்துணர்வுக்கு 2011 மே 4ந் திகதி அனைத்து இயக்கங்களும் உடன்பாட்டுக்கு வந்தன. அதன் தொடர்ச்சியாக மே 17ந் திகதி எகிப்திய தலைநகர் கெய்ரோவில் அனைத்து இயக்கங்களும் ஒன்றுகூடி, எதிர்காலத்தில் அமையவுள்ள அனைத்துக்கட்சி கூட்டரசாங்கத்துக்கான பொறிமுறை பற்றி விவாதித்தன. இந்த முக்கியமான கூட்டத்தில் இயக்கங்களுக்கிடையில் கடந்தகாலத்தில் நிலவிய பிரதான முரண்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டதுடன், இடைக்கால அரசாங்கம் அமைப்பது, தேர்தல் நடாத்துவது, பாதுகாப்புப்படைகளை புனரமைப்பது போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

பாலஸ்தீன விடுதலை அமைப்புகளின் இந்த ஐக்கிய முயற்சி இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளை கிலியில் ஆழ்த்தியுள்ளதுடன், அதைச்சீர்குலைக்கும் முயற்சியிலும் சியோனிஸ்ட்டுகளும் அவர்களது ஏகாதிபத்திய எஜமானர்களும் முயற்சித்தபோதிலும், அது கைகூடவில்லை.

# தடுக்கி விழுந்த பேராசிரியர் சிற்றம்பலம்!

தமிழரசுக் கட்சியின் உப தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ்.கே.சிற்றம்பலம் அவர்களை, பி.பி.சி தமிழ்ச்சேவை 2011 மே 18ம் திகதி செவ்வி கண்டது. பி.பி.சி சார்பில் ஒரு முக்கியமான கேள்வியாக "தமிழரசுக் கட்சியின் இனப்பிரச்சினை சம்பந்தமான கொள்கை" என்ன எனக் கேட்கப்பட்டது. ('வானவில்' 2011 மே மாத இதழின் தலைப்பு செய்தியாக 'இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும்' என பிரசுரிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது)

அதற்குப் பதிலளித்த சிற்றம்பலம், வழமையாக ஈழத் தேசியவாதிகள் சொல்லும், "தமிழர் தேசியம், சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி" என்று கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்த்தார். ஆனால் அவரது மொட்டையான பதிலால் திருப்தியடையாத பி.பி.சி செய்தியாளர், "உங்கள் கொள்கைகள் நடைமுறையில் எவ்வாறு இருக்கும்" என்ற அடிப்படையில் மீண்டும் ஒரு கேள்வியைக் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த சிற்றம்பலம், 'பூரண சமஸ்டி முறையே தமது கொள்கை என்றும்', அதன்படி 'இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பூரண சமஸ்டி வழங்கப்பட வேண்டும்' எனவும், 'மத்தியில் தமிழ் மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்' எனவும் விளக்கமளித்தார்.

அதைத் தொடர்ந்து, பி.பி.சி செய்தியாளர் இன்னொரு கேள்வியைத் தொடுத்தார். 'தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமின்றி, வேறு பல தமிழ் கட்சிகளும் இருப்பதால், இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக அவைகளுடனும் அரசாங்கம் பேச வேண்டும் தானே?' எனக் கேட்டார்.

இந்தக் கேள்வியிலுள்ள நியாயத்தை மறுக்க முடியாத சிற்றம்பலம், 'அதுசரிதான்' என்று ஏற்றுக்கொண்ட பேதிலும், தமிழர் சமூகத்தில் ஜனநாயகத்தையும், பன்மைத்துவத்தையும் ஏற்றுக் கொள்ளாத புலிகளின் பாணியில், 'ஆனால் அக்கட்சிகள் அரசாங்கத்துடன் சேர்ந்தல்லவோ இருக்கின்றன' என தனது மறுப்பையும் வெளியிட்டார்.

சிற்றம்பலத்தின் கருத்தின்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் அரச எதிர்ப்பு அரசியலையே முன்னெடுக்கவுள்ளமை தெளிவாகின்றது. இவ்வளவு காலமும் அரச எதிர்ப்பு அரசியலை நடாத்தி தமிழ் மக்களுக்கு அழிவைத் தவிர வேறு எதையும் பெற்றுத்தராத இந்த இனவாத பிற்போக்குத் தமிழ்த் தலைமைகள், தொடர்ந்தும் அந்த அழிவுகரமான பாதையில் பயணிக்க உள்ளது புலனாகின்றது.

அதேவேளையில் சிற்றம்பலம் தமது கொள்கைகளில் ஒன்றாக, மத்தியில் தமிழ் மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வேண்டுமென்கிறார். அதன் அர்த்தம் மத்திய அரசாங்கத்தில் பங்கு தானே? 72 வீதம் சிங்கள மக்கள் வாழும் நாட்டில், இயல்பாகவே அவர்கள்தானே ஆட்சியின் பிரதான பங்குதாரர்கள்? அந்தச் சூழ்நிலையில் அரசில் தமிழர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் என்பது, ஆட்சியில் பங்கு அல்லது அரசாங்கத்தை ஆதரிப்பதுதானே? அப்படியானால் அது அரசு ஆதரவு இல்லையா? சிற்றம்பலம் தமது கட்சி மட்டும் அரசை ஆதரிக்கலாம் மற்றவர்கள் ஆதரிக்கக்கூடாது என்ற 'சித்தாத்தந்தத்தை'க் கொண்டுள்ளாரா? அல்லது பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியை ஆதரிக்கமாட்டோம், 1965ல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் பங்குதாரர்களாக இருந்தது போல, அந்தக் கட்சி ஆட்சியுடன்தான் (வர்க்க) கூட்டு என்கிறாரா?

பேராசிரியர் சிற்றம்பலத்தை தடுக்கி விழுத்துவதற்காக இந்தக் கேள்விகளை நாம் அவரிடம் கேட்கவில்லை. பி.பி.சி செய்தியாளரின் கேள்வியால் தடுக்கி விழுந்துள்ள சிற்றம்பலத்தை, கைதூக்கி விடவே இந்தக் கேள்விகள்!

**- விடாக்கொண்டன்**

*

## பின்லேடன் மரணத்தை அல் கைடா உறுதி செய்தது

அல்கைடா இயக்கத்தின் தலைவர் பின் லாடன் அமெரிக்கப்படைகளால் கொலைசெய்யப்பட்டது உண்மைதான் என்பதை, அந்த இயக்கம் 2011 மே 13ம் திகதி உத்தியோகபூர்வமாக உறுதிசெய்துள்ளது. அதுசம்பந்தமான செய்தியை வெளியிட்ட அந்த இயக்கம், அதற்குப் பழிவாங்கும்முகமாக மேற்குநாடுகள் மீது தாக்குதல் நடாத்தப்படும் என்றும் எச்சரிக்கை செய்தது. பின் லேடனின் மரணத்தைத் தொடர்ந்து, அவரது இடத்துக்கு எகிப்தில் முன்னர் சிறப்புப்படை அதிகாரியாக இருந்த சைபல் ஆதல் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

1917ல் சோசலிச சோவியத்யூனியனின் தோற்றமும், இரண்டாவது உலக மகாயுத்தத்தில் நாஜி ஜேர்மனி மீதான சோவியத்தின் வெற்றியும், உலகின் பல பகுதிகளில் காலனித்துவ ஆட்சி நிலவிய நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டங்களைக் கிளர்ந்தெழ வைத்ததுடன், வாக்கப் போராட்டங்களையும் தீவிரப்படுத்தியது.

ஆனாலும் கூட அமெரிக்க – பிரிட்டிஸ் ஏகாதிபத்தியங்களின் உதவியுடன் பாலஸ்தீனர்களின் தாயகத்தை கபளீகரம் செய்து 1948ல் சியோனிஸ்டுகளின் இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் இனவெறி கொண்ட ஹிட்லர் பல லட்சம் யூத மக்களை ஐரோப்பாவில் விசவாயுக் கிடங்குகளில் அடைத்துப் படுகொலை செய்ததால் எழுந்த அனுதாபத்தைப் பயன்படுத்தி ஏகாதிபத்தியவாதிகள் இஸ்ரேல் என்ற விச ஈட்டியை பாலஸ்தீன – அரபு மக்களின் இதயத்தில் பாய்ச்சினர்.

ஐக்கிய நாடுகள் சபையின் சட்ட திட்டங்களையும் கால அட்டவணையையும் மீறி, 1948 மே14ந் திகதி சியோனிச இஸ்ரேல் பிரகடனம் செய்யப்பட்டது. அதாவது ஆரம்பத்திலேயே ஐ.நா. சபை ஒதுக்கிய நிலப்பகுதியை விட கூடுதலான நிலப்பகுதியை கபளீகரம் செய்தே இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. இவ்வாறு ஐ.நாவை புறந்தள்ளி பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீன மக்களை பலவந்தமாக வெளியேற்றியும், கொலை செய்தும் தான் இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. இப்படியாக திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இஸ்ரேல் என்ற நாடு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஹரி ரூமனால் (Harry Truman) 11 நிமிடங்களில் அங்கீகரிக்கப்பட்டது.

1947ல் ஐ.நா. மேற்கொண்ட தீர்மானத்தின்படி பாலஸ்தீனம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பாலஸ்தீனம், இஸ்ரேல் என்ற இரு நாடுகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஏகாதிபத்திய சக்திகளின் உதவியுடன்

# ஐ.நாவின் உதவியுடன் பாலஸ்தீனர்களை நாடற்றவர்களாக்கிய இஸ்ரேலிய சியோனிசம்!

-காவலூர் பாலன்-

இஸ்ரேல் உருவாக்கப்பட்ட அதேவேளையில், பாலஸ்தீனாகள் இன்றுவரை தமக்கென்று ஒரு நாடு இல்லாமல் இருப்பதுடன், இஸ்ரேலர்களால் அவர்களது பூமி ஆக்கிரமிக்கப்படுவதுடன், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த அடாவடித்தன நடவடிக்கைகள் இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டதல்ல. 1897ல் சுவிஸ் நாட்டின் பாசல் (Basle) நகரில் நடைபெற்ற முதலாவது உலக சியோனிச மாநாட்டிலேயே, சியோனிச நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் முதன்முதலில் முன் மொழியப்பட்டன. சியோனிச இயக்கத்தின் தந்தையான தியோடர் கேர்சல் (Theodar Herzl) என்பவரால் முன்மொழியப்பட்ட சியோனிச சிந்தனையின் அடிப்படையிலேயே அதன் செயல்பாடுகள் இன்றும் தொடர்கின்றன. அவர் கூறியதாவது, ''நாங்கள் முதலில் மிகவும் வறுமையில் வாடும் அராபியர்களை பாலஸ்தீனத்தின் எல்லைகளுக்கு வெளியே கலைத்து விடுவோம்.....இவ்வாறு பாலஸ்தீனியர்களின் வாழ்வுரிமையை மறுத்தலும், ஏனையவர்களை வெளியேற்றுவதும் கவனமாகவும், திட்டமிட்டும், அவை தனித்தனியாக நடைபெற வேண்டும்'' (பார்க்க The Complete Diaries of Theodor Herzl)



இதைத்தொடர்ந்து ''பால்போர் தீர்மானம்'' (Balfour Declaration) என்ற தீர்மானத்தை பாலஸ்தீனத்தை அன்று ஆக்கிரமித்திருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் வெளிவிவகாரச் செயளராக இருந்த ஆர்தர் பால்போரினால் முன்மொழியப்பட்டது. இத்தீர்மானம் பற்றி ஆர்தர் அவர்களால் ரோத் சைல்ட் பிரபுவுக்கு (Lord Roth Child) எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிப்பட்டுள்ளது.

“மக்கள் இல்லாத நிலத்திற்கு, நிலமில்லாத மக்கள்” (Land without a People for a People Without Land)

இதைத்தொடர்ந்து “பால்போர் தீர்மானம்” (Balfour Declaration) என்ற தீர்மானம் பாலஸ்தீனத்தை அன்று ஆக்கிரமித்திருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் வெளிவிவகாரச் செயளாராக இருந்த ஆர்தர் பால்போரினால் முன்மொழியப்பட்டது. இத்தீர்மானம் பற்றி ஆர்தர் அவர்களால் ரோத் சைல்ட் பிரபுவுக்கு (Lord Roth Child) எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிப்பட்டுள்ளது.

“மேன்மை தங்கிய பிரித்தானிய அரசு, பாலஸ்தீனத்தில் யூத மக்களுக்கு ஒரு தாய்நாடு அமைப்பதற்கு சாதகமாகச் சிந்திக்கின்றது….எங்களுக்கு தெளிவாக விளங்குவது என்னவெனில், இவ்வாறு பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு தனிநாடு அமைப்பது, தற்போது பாலஸ்தீனத்தில் வசிக்கும் யூதர்கள் அல்லாத சமூகத்தின் சிவில், சமய உரிமைகளுக்கு பாதிப்பில்லாமல் இருக்க வேண்டும்”

இந்தக் குறிப்பில் பாலஸ்தீனத்தின் சொந்த மக்கள் அரபுக்கள் என்ற பதம் தவிர்க்கப்பட்டு, யூதர் அல்லாத மற்ற இனத்தவர் என்று கபடத்தனமாக வரையறுக்கப்படுவது கவனிக்கத்தக்கது. ஆனால் அப்போது பாலஸ்தீனத்தில் வாழ்ந்த மக்களில் 92 வீதம் பேர் அராபியர்களாக இருந்தது மட்டுமின்றி, 98 வீதமான நிலவுரிமையும் அவர்களுடையதாகவே இருந்தது. இந்த அடிப்படை உண்மையை மறைப்பதற்காகவே, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி “அராபியர்” என்று நேரடியாகக் குறிப்பிடாமல், “யூத சமூகத்தைச் சாராத மற்றவர்கள்” என கபடத்தனமாகக் குறிப்பிடுகின்றார்.

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் இந்த ‘பிரித்தாளும்’ தந்திரோபாயத்தால், அவர்கள் ஆட்சி புரிந்த பல நாடுகளின் மக்கள் இன்றுவரை தமக்குள் முட்டி மோதி அடிபட்டு அழிவதை நாம் கண்கூடாகக் காணலாம். உதாரணத்துக்கு அவர்கள் ஆட்சி புரிந்த இந்தியாவில் ஏற்பட்ட இந்து – முஸ்லீம் மோதல்களையும் பிரிவினையையும், இலங்கையில் தமிழ் – சிங்கள மக்களுக்கிடையில் நிகழும் மோதல்களையும் குறிப்பிடலாம். இதைத்தான் 2000 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய ரோம ஆட்சியாளர்களும் யூத மக்களுக்கு எதிராகவும், யேசு கிறிஸ்து என்ற புரட்சியாளனும் மீட்பனுமான யேசுநாதருக்கு எதிராகவும் பயன்படுத்தினார்கள். (பார்க்கவும் ராகுல சங்கிருத்தியாயன் எழுதிய ‘வால்காவிலிருந்து கங்கை வரை’ என்ற நூலை)

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் இந்த கபட நாடகத்தைப் பற்றி அந்நாட்டின் வரலாற்று ஆசிரியரான ஆர்னோல்ட ரொயின்பி (Arnold Toynbee) பின்வருமாறு குறிப்பிடுகின்றார் “நாங்கள் எங்களுக்கு சொந்தமற்ற ஒன்றை (பாலஸ்தீனத்தை) அதற்குரியவர்களிடமிருந்து பறித்து, இன்னொருவருக்கு (யூத குடியேற்றவாசிகளுக்கு) கொடுக்கின்றோம். நாங்கள் பாலஸ்தீன அரபுக்களின் சுயாதீன உரிமையை மூன்றாவது நபர் ஒருவருக்கு தருவதாக முன்மொழிகின்றோம், உறுதியளிக்கின்றோம்”.

1947 நவம்பர் 29ல் ஐ.நா.பொதுச்சபையில் பாலஸ்தீன மக்களுக்கு எதிராகவும், யூத மக்களுக்கு சாதகமாகவும் 181வது இலக்க தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதன்படி மிகச்சிறிய தொகையினரான, புதிதாக வந்தவர்களான யூத குடியேற்றவாசிகளுக்கு 56 வீதமான நிலமும், அந்த மண்ணின் சொந்தக்காரர்களான அரபுக்களுக்கு 42 வீதமான நிலமும், மிகுதி சர்வதேசத்துக்கும் என அநீதியான முறையில் பிரிக்கப்பட்டது. பாலஸ்தீனத்தில் இருந்த மொத்த சனத்தொகையில் அண்மையில் வந்தவர்களாகவோ, கள்ளக் குடியேற்றக்காரர்களாகவோ இருந்த யூதர்களின் தொகை பாலஸ்தீனத்தின் மொத்த சனத்தொகையில் 31 வீதமாக அதிகரித்தபோதிலும், அவர்கள் 5.6 வீத நிலத்திற்கு மட்டுமே உரித்துடையவர்களாக இருந்தனர். யூதர்களுக்கு எனப் பிரித்துக் கொடுக்கப்பட்ட பகுதியில் கூட அரைப்பங்கு மக்கள் முஸ்லீம்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் இருந்தனர். அந்த நிலைமையில் அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக அந்த நிலைமையை ஐ.நா மாற்றி அமைத்து பாலஸ்தீனர்களுக்கு அநீதியான முறையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரச்சினையின் தொடர்ச்சியில் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்கள், சண்டைகளின் முடிவில் பாலஸ்தீன மக்களின் 78 வீதமான நிலங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்ததுடன், 750,000 பாலஸ்தீன மக்களை அவர்களது வீடுகளிலிருந்து அடித்து விரட்டியது. அராபிய முஸ்லீம், கிறிஸ்தவ மக்களை முற்றாக வெளியேற்றி இனச்சுத்திகரிப்பு செய்வதன் மூலம் “தூய யூத சாம்ராஜ்யத்தை” நிறுவுவது என்பதே சியோனிசத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.

இதை டேவிட் பென்கூரியன் (David Ben Gurion) 1937ல் தனது மகனுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு உறுதிப்படுத்துகிறார். "நாங்கள் அராபியர்களை அவர்களது சொந்தப் பூமியிலிருந்து விரட்டிவிட்டு, அவர்களது நிலங்களைக் கைப்பற்றுவோம்" அதுமாத்திரமல்ல, 1948 யூலையில் நஸரத்தை இஸ்ரேலியர்கள் கைப்பற்றிய பின், அதைப் பார்வையிடச் சென்றபோது அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். "ஏன் அராபியர்களை இன்னும் இங்கே விட்டு வைத்திருக்கிறீர்கள்? ஏன் இன்னும் அவர்களை இங்கிருந்து கலைக்காமல் இருக்கிறீர்கள்?"

**மிகுதி அடுத்த இதழில்......**

## *யாழ் மாவட்டத்தில் ஈழப்போரின் பக்க விளைவுகள்!*

கடந்த காலத்தில் நடைபெற்ற போரின் விளைவாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்வரும் நிலைமைகள் காணப்படுவதாக அம்மாவட்டத்தின் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் அண்மையில் சில தகவல்களை வெளியிட்டுள்ளார். அவை வருமாறு:

- யுத்தம் காரணமாக யாழ் மாவட்டத்தில் 15 ஆயிரம் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.
- பயங்கரவாத நடவடிக்கைகளால் பெற்றோரை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 990 ஆகும்.
- போரின் காரணமாக தாய் தந்தையரை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 437 ஆகும்.
- தந்தையை மட்டும் இழந்தவர்களின் எண்ணிக்கை 6321 ஆகும்.
- பெற்றோரால் கைவிடப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 489 ஆகும்.
- யாழ்ப்பாணக் குடாநாட்டில் 2010ல் 251 பதின்ம வயதுச் சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளனர். 2011 ஜனவரி – பெப்ருவரி மாதங்களில் மட்டும் 109 பேர் அவ்வாறு கருத் தரித்துள்ளனர்.
- 163 பேர் சிறுவர் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
- தந்தையே தனது சிறுவயது மகளை வன்புணர்ச்சி செய்த முறைப்பாடுகள் சிலவும் பதிவாகியுள்ளன.

நிச்சயமாக இந்த நிலைமைகள் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற தேவையற்ற கொடிய யுத்தமொன்றின் பக்க விளைவுகளாகும்.




இந்த நிலைமைகள் மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களில் மேலும் பல மடங்கு அதிகம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏனெனில் அம்மாவட்டங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் பிள்ளைகள்தான் கூடுதலாக புலிகளால் பலவந்தமாகத் தமது படையணிகளில் சேர்க்கப்பட்டு அழிவுக்குள்ளாக்கப்பட்டவர்கள்.

அந்த மக்கள் இந்த அவல நிலையை அடைவதற்கு புலிகள் மட்டுமின்றி, தமது சொந்த சுயநலத்திற்காக, அவர்களது யுத்த சன்னதத்திற்கு பெருமளவு நிதி கொடுத்து உதவிய புலம்பெயர் தமிழர்களும் காரணம் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

இப்பொழுது அந்த மக்களின் வாழ்க்கையைப் படிப்படியாக சீரமைப்பதற்கு அரசாங்கம் முயற்சி மேற்கொண்டு வரும் சூழ்நிலையில், அதற்கு உதவுவதற்குப் பதிலாக, அவர்களை மேலும் மேலும் துன்பத்துக்குள் தள்ளிவிடும் செயல்களை புலம்பெயர் புலித்தமிழர்கள் செய்து வருகின்றனர். அவர்களது இந்தச் செயல்களுக்கு கடந்த காலங்களைப் போல தெரிந்தோ தெரியாமலே உதவிகள் எதுவும் புரியாது, தம்மை விலக்கி வைத்திருப்பது தாயகத்தில் வாழும் தமிழ் உறவுகளுக்கு புலம்பெயர் தமிழர்கள் செய்ய வேண்டிய தலையாய கடமையாகும்.

✷ முத்தமிழ் என்று அழைக்கப்படும் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூன்று பிரிவுகளைக் கொண்ட செம்மொழியான தமிழ்மொழியில் பொதுவாக தமிழ் இலக்கணம் என்பது இயற்றமிழ் இலக்கணத்தைக் குறிக்கின்றது. அகத்திய மாமுனிவரால் இயற்றப்பட்ட அகத்தியம் என்னும் நூலே முதலாவது தமிழ் இலக்கண நூல் என்று கருதப்படுகிறது, அதன் பின்னர் தொல்காப்பியமும் பின்னர் 13ம் நூற்றாண்டளவில் நன்னூலும் மூன்று பிரசித்திபெற்ற இலக்கண நூல்கள் ஆகும். ✷

# இலங்கையில் பொதுமக்கள் மீதான 'விடுதலை இயக்க' கொலைத் தாக்குதல்களின் விபரம்!



இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தத்தில் சுமார் 1 லட்சம் மக்கள் கொல்லப்பட்டதாக கணக்கிடப்படுகிறது. 2009 மே மாதம் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது மட்டும், புலிகள் பொதுமக்களை பாதுகாப்பு கேடயமாக பலவந்தப்படுத்தி வைத்திருந்ததின் காரணமாக, பல்லாயிரக்கணக்கான மக்கள் யுத்தத்தில் சிக்கி அநியாயமாக உயிரிழந்தனர். 'சிங்களப் பெருந்தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம்' என்ற சுலோகத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம், பின்னர் இயக்கங்களுக்கிடையில் சகோதரப் படுகொலைகளாக மாறி, இறுதியில் பொதுமக்களை இலக்கு வைத்துக் கொல்லும் பாசிச செயற்பாடாக மாறியது. பொதுமக்களுக்கெதிரான தாக்குதல்களில் அநேகமாக எல்லா பிரதான இயக்கங்களும் ஈடுபட்டிருந்தாலும், அவற்றில் 99 வீதமானவை விடுதலைப் புலிகளால் நிகழ்த்தப்பட்டவையாகும். அவற்றில் 1984 முதல் 2009 வரை நடாத்தப்பட்ட தாக்குதல்களில் முக்கியமான சிலவற்றை தொடர்ந்து தர இருக்கின்றோம். - ஆசிரியர் குழு

- **1984 நவம்பர் 29**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள டொலர் ஃபாம் கிராமம் தாக்கப்பட்டு 33 மக்கள் கொலை செய்யப்பட்டனர். அவர்களது சொத்துகள் சூறையாடப்பட்டு, வீடுகள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

- **1984 நவம்பர் 30**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கென்ற் ஃபாம் கிராமம் தாக்கப்பட்டு 29 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டனர்.

- **1984 டிசம்பர் 01**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் மற்றும் நாயாறு மீனவக் கிராமங்கள் தாக்கப்பட்டு 18 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 13 பேர் காயமடைந்தனர்.

- **1985 ஜனவரி 19**

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முறிகண்டியில் 'யாழ்தேவி' புகையிரதத்தை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டதுடன், 5 பேர் காயமடைந்தனர்.

- **1985 மே 14**

அனுராதபுரத்திலுள்ள ஸ்ரீமகாபோதி விகாரை மீது நடாத்திய தாக்குதலில் 120 பேர் கொல்லப்பட்டதுடன், 85 பேர் காயமடைந்தனர்.

- **1985 மே 14**

புத்தளம் மாவட்டத்திலுள்ள வில்பத்து பகுதியில் நடாத்தப்பட்ட தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

- **1985 ஜூன் 04**

திரிகோணமலை மாவட்டத்திலுள்ள தெகிவத்த கிராமத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலில் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

- **1985 ஆகஸ்ட் 02**

பொலநறுவ மாவட்டத்திலுள்ள றுகுணுசோமவத்த பௌத்த விகாரை மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர்.

- **1985 ஆகஸ்ட் 14**

அம்பாறை மாவட்டத்திலுள்ள அரந்தலாவ கிராமத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர்.

- **1985 ஆகஸ்ட் 18**

திரிகோணமலை மாவட்டத்திலுள்ள நமல்வத்த கிராமத்தில் நடாத்தப்பட்ட தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

**அடுத்த இதழில் தொடரும்......**


# புராதன பழங்குடி பொதுவுடமை அமைப்பும் அதன் வீழ்ச்சியும்

**பேராசிரியர் ஜோர்ஜ் டேர்வென்ற் தொம்ஸன் (George Derwent Thomson)**

விலங்குகளின் உலகிலிருந்து மனிதன் உதித்தெழுந்து ஏறத்தாழ இருபது லட்சம் ஆண்டுகள் ஆகின்றன. இருந்தாலும் உலகின் மிகத் தொன்மையான நாகரிகம்கூட ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையதல்ல. ஆக, வர்க்க சமுதாயம் என்ற கட்டம் - இதன் முடிவோ இப்போதே நம் கண்ணுக்கு தட்டுப்பட்டு விட்டது – மனிதனின் சரித்திரத்தில் ஒரு சிறிய கூறுதான். வர்க்க சமுதாயத்துக்கு முந்தைய கட்டத்தின் இறுதிகாலப் பகுதிகளில் தவிர, மற்ற முந்தைய கால கட்டங்களிலெல்லாம் அவன் சிதறிக் கிடந்த சிறு சமூகங்களில் வாழ்ந்தான். இவை எப்போதும் இடம்மாறிய வண்ணம் இருந்தன. இச்சமூகங்கள் தங்கள் பயன்பாட்டுக்கு மட்டுமே பொருள் உற்பத்தி செய்து வந்தன. சமூக வேலைப் பிரிவினைகள் இங்கு இருக்கவில்லை. மிக எளிமையான, அதிக நுட்பமற்ற கருவிகளைக் கொண்டே உற்பத்தி செய்யப்பட்டது. இச்சமூகங்களில் சமூகக் கட்டமைப்பு இன்னமும் இயற்கையான உறவுகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது.

பழங்குடி அமைப்பு தாய்வழி இரத்த உறவுமுறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒவ்வொரு பழங்குடியும் இரு சம பாதிகளாக (Moities) அமைந்தது. ஒவ்வொரு பாதியும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குலங்களைக் (Clans) கொண்டிருந்தது. இரு வெவ்வேறு சம பாதிகளைச் சேர்ந்த ஆணும் பெண்ணும்தான் இணைய அனுமதிக்கப்பட்டனர். ஓரிடத்தில் தங்கி கூடாரம் அடிக்கும்போது, பழங்குடி அமைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் இருப்பிடங்களும் அமைந்தன. வட்டமாக முகாமிட்டு, அதை அரைவட்டங்களாகவும் கால்வட்டங்களாகவும் பிரித்துவிடுவர். ஒவ்வொரு குலத்திற்கும் ஏற்ற கால்பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டது. இப்படி நான்கு கால்பாகங்களைக் கொண்ட வட்டமே பிரபஞ்சம் பற்றி பண்டைக் காலத்தில் கொண்டிருந்த கருத்தாக்கங்களுக்கான ஒரு முன்மாதிரியாக அமைந்தது.

பழங்குடிச் சமுதாயம் பொது உடமையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. துவக்கக்




கட்டங்களில் எல்லோருக்கும் சமபங்கு அளித்தல் என்ற கொள்கை கேள்வி ஏதுமின்றி இயற்கையான கட்டாய நிலையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிற்பாடு குலங்கள் குடும்பங்களாகச் சிதறுண்டு போக ஆரம்பித்தவுடன், சமபங்குக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்ட சமூக நியதியாகிவிட்டது. மேய்ச்சல் நிலங்கள் பொதுவில் இருந்தன. விளைநிலங்கள் நீண்ட துண்டுகளாக வகுக்கப்பட்டு, அவ்வப்பொழுது மறுபங்கீடும் செய்யப்பட்டன. இந்த மறுபங்கீட்டின் மூலம், வேலை செய்பவர்கள் ஒரு குடும்பத்தில் எத்தனைபேர் உள்ளனரோ அதற்கேற்ற விதத்தில் பங்கு கொடுக்கப்பட்டது. 'ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப' என்ற கோட்பாடு பண்டைய நாளில் இப்படித்தான் செயல்பட்டது.

பழங்குடிச் சமுதாயத்தில் மக்களாட்சி முறை நிலவியது. பழங்குடிப் பேரவை ஒன்று இருந்தது. அது குலங்களால் நியமிக்கப்பட்ட குலத் தலைவர்கள் அல்லது முதியோர்களைக் கொண்டு அமைந்தது. பேரவை உறுப்பினர்கள் தேர்தல் முறையில் பதவிக்கு வந்தனர். தேவை ஏற்பட்டால் இவர்களைப் பதவி விடுத்து திரும்ப அழைக்கும் உரிமையும் மக்களுக்கு இருந்தது. பழங்குடி மக்களனைவரும் - ஆண்களும் பெண்களும் - கூடியிருக்க, அவர்கள்முன் பேரவை கூடிச் செயல்பட்டது. பேரவையின் முடிவுகளுக்கு மக்களின் ஒப்புதல் தேவையாயிருந்தது. சுரண்டல் இல்லாததால், சட்டத்தையும் ஒழுங்கையும்

பாதுகாக்கவென்று தனி அணி எதுவும் தேவைப்படவில்லை.

போர்களால் பழங்குடிச்சமுதாயம் விரைவாகச் சிதைந்தது. மக்கள்தொகை அதிகரிக்கவும், பழங்குடிகளுக்கிடையே பூசல்கள் எழுந்தன. இவை சூறையாடலுக்கான திடீர்த் தாக்குதல்களுக்கு வழி கோலின. விரும்பி முன்வரும் சிலருடன் சேர்ந்து பழங்குடித் தலைவர்கள் இத்தாக்குதல்களை நடத்தினர். இத்தாக்குதல்களில் கைப்பற்றப்பட்ட கொள்ளைப் பொருள்கள் தாக்குதல்களில் பங்கெடுத்துக்கொண்டவர்களிடையே பங்கிடப்பட்டன. தலைவனுக்கு ஒரு சிறப்புப் பங்கு கொடுக்கப்பட்டது. இது அவனுடைய சொத்தாகவே மாறியது. போர்முறை மேலும் வளர்ச்சியடையவும், வெற்றிபெற்றவர்கள் தோல்வியுற்ற குழுக்களைச் சேர்ந்த ஆண்களைக் கொன்றனர். பெண்களையும் குழந்தைகளையும் அடிமை கொண்டனர். தோற்ற பழங்குடியின் நிலத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாயினர். கைப்பற்றப்பட்ட அடிமைகளையும் நிலத்தையும் வெற்றிவாகை சூடிய பழங்குடியினர் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர். இங்கு மறுபடியும் தலைவர்களுக்கு சிறப்புப் பங்குகள் ஒதுக்கி வைக்கப்பட்டன.

சிலசமயம், கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் குடியிருந்தவர்கள் தொடர்ந்து அவர்கள் நிலத்தில் வாழ அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் பண்ணை அடிமைகளாக இருந்து, தம்மை வென்றவர்களுக்காக நிலங்களைப் பயிரிட்டனர். வெல்லப்பட்ட பிரதேசத்துடன் சேர்த்து இவர்களும் வெற்றி பெற்றவர்களின் மறுஉற்பத்திக்குத் தேவையான 'பொருள்வகைக் காரணி'களில் ஒன்றாகவே கருதப்பட்டனர். எனவே பண்ணையடிமைகள் முழுமனிதர்களாகக் கருதப்படவில்லை.

காலப்போக்கில் பூசலிடும் பழங்குடியினரும், பழங்குடியினர் கூட்டுகளும் (Tribal Leagues) இணைந்து இராச்சியங்களாக (Kingdoms) மாறின. பழங்குடித் தலைவர்களான உயர்குடியினர், தனிமுதன்மை பெற்ற ஒரு அரசனின் கீழிருந்து இந்த இராச்சியங்களை நிர்வகித்தனர். அரசனின் இருப்பிடமே நிர்வாக மையமாகியது. நகரம் நாட்டுப் புறத்தினின்று பிரிந்து இயங்கியது. இப்பிரிவினால் கைத்தொழில், உழவுக் தொழிலிலிருந்து பிரியலாயிற்று. இது உபரி – மதிப்புக்கான புதிய சாத்தியக்கூறுகளை உருவாக்கியது. அதே வேளையில், தாய்வழி ஏற்பட்ட இரத்த உறவை அடிப்படையாகக் கொண்ட பழைய பழங்குடி உறவுகள் பலவீனப்பட்டு வந்தன. குல அமைப்புக்குப் பதிலாக உருவான புதிய அலகு, தந்தை வழிக் குடும்பமாகும். இந்தக் குடும்பம் அதற்குச் சொந்தமான ஒரு நிலத்துடன் நெருக்கமாகப் பிணைந்திருந்தது. இந்த நிலவுடமையும் மற்ற எல்லாச் சொந்துரிமைகளும் ஆண்வழி மரபுரிமைகளாகவே இருந்தன. சமுதாயத்தில் ஒருவர்க்கம் மற்றவர்களைச் சுரண்டுவது பெருகப் பெருக, அதற்கு நேரிணையாக குடும்பத்துக்குள்ளும் பெண் ஆணுக்கு அடிமையானாள்.

**(மார்க்சிய சிந்தனையாளரான ஜோர்ஜ் டேர்வென்ற் தொம்சன் (1903 – 1987), இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிந்தவராவார். அவர் எழுதிய 'முதலாளித்துவமும் அதன் பிறகும்' (Capitalism and After) என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியே மேலேயுள்ள கட்டுரையாகும். இதுதவிர, From Marx to Mao, Human Essence, Marxism and Poetry ஆகிய நூல்கள் உட்பட சுமார் 20 வரையிலான நூல்களையும், நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.**

*

# புலிகளின் வதை முகாம் அனுபவங்கள்!
## மணியம் எழுதுகிறார்!!

புத்தகக்கடை மணியம், இயக்கச்சி மணியம் எனப் பலராலும் அறியப்பட்ட, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) யின் முன்னாள் வட பிரதேசச் செயலாளர் தோழர் சண்முகம் சுப்பிரமணியம், பாசிசப் புலிகளால் 1991ம் ஆண்டு டிசம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டு, 1993ம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஒன்றரை ஆண்டுகள் அவர்களது வதை முகாம்களில் வைக்கப்பட்டிருந்தவர். அவர் தனது புலிகளின் வதை முகாம் அனுபவங்களை, 'தேனீ' இணையத்தளத்தில் 2011 ஜூன் 17ம் திகதி வெள்ளிக்கிழமை முதல், பிரதி வெள்ளி தோறும் தொடராக எழுதவுள்ளார். ஏற்கெனவே அவரைப்பற்றிய அறிமுகக் குறிப்பு ஒன்று ஜூன் 10ம் திகதி தேனீ இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.
அவரது தொடரை வாசிக்க விரும்புபவர்கள் www.thenee.com அல்லது www.theneeweb.de என்ற முகவரிகளை அழுத்திப் பார்வையிடலாம்.

# அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மேலும் 9 கிராமசேவை பிரிவுகள் மீள் குடியமர்வுக்கு அனுமதி!




**வ**லிகாமம் வடக்கில், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியைச் சேர்ந்த 9

கிராமசேவகர் பிரிவுகள், மீள் குடியேற்றத்துக்காக அண்மையில் இராணுவத்தால் யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ஆவையாவன நகுலேஸ்வரம் (ஜே – 226), தெல்லிப்பழை (ஜே – 228), தந்தை செல்வாபுரம் (ஜே – 230), மாவிட்டபுரம் (ஜே – 231), கட்டுவன் தெற்கு (ஜே – 239), மாவிட்டபுரம் தெற்கு (ஜே – 232), பளை வீமன்காமம் வடக்கின் ஒரு பகுதி (ஜே – 236), பளை வீமன்காமம் தெற்கு (ஜே – 237) என்பனவாகும். அதேவேளையில், கொல்லங்கலட்டியின் (ஜே – 225) எஞ்சிய பகுதிகள், மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் வைத்து, யாழ்.அரசாங்க அதிபரிடம் இராணுவத்தால் கையளிக்கப்பட்டது. இதன் மூலம் அப்பகுதிகளைச் சேர்ந்த சுமார் 3500 குடும்பங்கள் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் தத்தமது சொந்த இடங்களில் குடியேறும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இந்த வைபவங்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அரச உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் எஞ்சியுள்ள கிராமங்களில் விரைவில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படுவார்கள் என, கொழும்பில் வைபவம் ஒன்றில் பேசிய யாழ்மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க குறிப்பிட்டுள்ளார்.

போர் முடிவுற்ற பின்னர் வட மாகாணத்தில் இதுவரை 373,593 பேர் (114,541 குடும்பங்கள்) மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. 2009 மே 18ம் திகதி புலிகளைத் தோற்கடித்த பின், அவர்களது பிடியில் சிக்கியிருந்த 3 லட்சம் வரையிலான மக்களை இராணுவம் பாதுகாப்பாக மீட்டு வந்து, முதலில் வவுனியாவில் நலன்புரி முகாம்களில் தங்க வைத்திருந்து, பின்னர் அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றி வருகின்றது. தற்பொழுது அந்த மீள் குடியேற்றம் 99 வீதம் பூர்த்தியடைந்துள்ளது. அரசாங்கத்தின் முயற்சியானது உலகில் போர் நடைபெற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில், முன்னுதாரணமிக்க ஒன்றாகும்.

அரசாங்கத்தின் இந்த பாரிய மனிதாபிமான முயற்சியை, புலிகளும், அவர்களது பினாமிக் குழுவான தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அரச சார்பற்ற அமைப்புகள் என்ற ஏகாதிபத்திய ஒட்டுண்ணிகளும் தவறாகப் பிரச்சாரம் செய்து, ‘‘அரசாங்கம் தமிழ் மக்களை நிரந்தரமாக முள் கம்பி வேலிகளுக்குள் அடைத்து வைத்திருக்கப் போகின்றது’’ என ஓயாமல் பூச்சாண்டிப் பிரச்சாரம் செய்து வந்தனர். இப்பொழுது அவர்கள், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் கைகளைப் பிசைவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

சில வேளைகளில் அவர்கள், தாங்கள் ‘கத்தித்தான்’ அரசாங்கம் மீள் குடியேற்றம் செய்தது என்று, ‘விழுந்தும் மீசையில் மண் படாமல்’ என்ற கணக்காகச் சொல்லவும் கூடும்! யார் கண்டது?

*

---

‘வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்பது வரலாறு என்ற அறிவுத் துறையில் இருந்து வேறுபட்டு நிற்கிறது. வரலாறு என்பது காலவரிசை அடிப்படையில் நாடுகளின் வரலாற்றையும் அவற்றில் வாழும் மக்களையும், அங்கு நடந்த முக்கிய நிகழ்வுகளையும் குறித்த அறிவுத் துறையாகும். ஆனால் வரலாற்றுப் பொருள்முதல்வாதமோ பொதுவான கோட்பாடுகளையும் முறைகளையும் கூறும் ஓர் அறிவுத் துறையாகும். ஒரு குறிப்பிட்ட மக்களையோ நாட்டையோ தன் ஆய்வுப் பொருளாக அது கொள்ளவில்லை. மாறாக, ஒட்டுமொத்த மனித சமூகத்தையும் அதன் வளர்ச்சிக்கான உந்து சக்தியையும் கண்டறிகிறது.’

**– ஆ. சிவசுப்பிரமணியன்**

# ஃபிடல் கஸ்ட்ரோ 46 ஆண்டுகளாக வகித்த கியூப கம்யூனிஸ்ட் கட்சி தலைமைப் பதவியைத் துறந்தார்!

1959ம் ஆண்டு கியூபப் புரட்சி நடைபெற்ற நாள் முதல் அந்நாட்டின் அரசு மற்றும் மக்களின் ஒப்புயர்வற்ற தலைவராகவும், 1965 முதல் கியூபக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது செயலாளராகவும் திகழ்ந்த 84 வயது நிறைந்த ஃபிடல் கஸ்ட்ரோ, முதுமை காரணமாகத் தனது கட்சித் தலைமைப் பதவியை அண்மையில் உத்தியோகபூர்வமாகத் துறந்துள்ளார். 14 வருடங்களின் பின்னர், 2011 ஏப்ரல் 16 முதல் 19 வரை தலைநகர் ஹவானாவில் நடைபெற்ற கியூபக் கம்யூனிஸ்ட் கட்சியின் 6வது காங்கிரஸ் நடைபெற்றபோதே கஸ்ட்ரோ முறைப்படி தனது பதவியை ராஜினாமாச் செய்தார். அவரது இடத்திற்கு அவரது சகோதரரும், புரட்சியில் அவருடன் பங்கு வகித்தவரும், தற்போதைய ஜனாதிபதியுமான 79 வயது நிரம்பிய ராவூல் கஸ்ட்ரோ தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த தேசிய காங்கிரசில் நாடு முழுவதுமிருந்து 1000 கட்சிப் பிரதிநிதிகள் பங்குபற்றியதுடன், நாட்டின் சோசலிச அமைப்பை மேலும் பலப்படுத்துவது பற்றியும், அதை தற்போதைய யதார்த்த சூழ்நிலைகளுக்கு ஏற்ற வகையில் முழு வீச்சுடன் முன்னெடுத்துச் செல்வது பற்றியும் விவாதிக்கப்பட்டது. நாட்டின் பொருளாதாரத்தை சக்திமிக்கதாக வளர்க்கும் வகையில், 311 அம்சங்கள் அடங்கிய திட்டமொன்றும் பிரதிநிதிகளால் விவாதித்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புதிய சீர்திருத்தக் கொள்கைகளின்படி, அரசாங்கத்துறையுடன் தனியார்துறைக்கும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு குறிப்பிட்டளவு பங்கு வழங்கப்படுவதுடன், அரசாங்கதுறைகளில் இருக்கும் மேலதிக வேலை சக்தியைக் குறைத்து அவர்களுக்கு புதிய உற்பத்தித்துறைகளில் வாய்ப்பு வழங்கப்படும். பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் உணவுமானிய முறைகளிலும் சில மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளது. புதிய மாற்றங்கள் அடுத்த 10 ஆண்டுகளில் கியூபாவின் பொருளாதாரத்தை புதிய உயர்ந்த கட்டத்துக்கு எடுத்துச் சென்று, அந்நாட்டு மக்களின் வருமானத்தை கணிசமான அளவு அதிகரித்து, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நன்றி: Gramma – கியூபத் தினசரி**

# அல்பேனிய தலைநகர் திரானா மேயர் தேர்தலில் சோசலிசக் கட்சி வெற்றி!

அல்பேனியாவின் தலைநகர் திரானாவின் (Tirana) முதல்வர் (Mayor) பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சியான சோசலிசக்கட்சியின் வேட்பாளர் Edi Rama வெற்றியீட்டியுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் உள்துறைஅமைச்சர் Lulzim Basha தோல்வியடைந்தார்.
அல்பேனிய சோசலிசக்கட்சி அந்நாட்டில் முன்னா அரை நூற்றாண்டு காலம் அதிகாரத்திலிருந்த அல்பேனிய கம்யூனிஸ்ட் கட்சியின் மறுவடிவமாகும். சோசலிசக்கட்சியின் தற்போதைய வெற்றி, முன்னைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்கள் மீண்டும் சோசலிச அமைப்பின்பால் கொண்டு வரும் தொடர்ச்சியான ஈர்ப்பின் அடையாளமாகும் எனக் கருதப்படுகிறது.

15ம் பக்கத் தொடர்ச்சி...

இவர் கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிட்டவர் என்பதுடன், 1987ல் இந்திய - இலங்கை உடன்படிக்கை உருவாக்கப்பட்டு, வடக்கு கிழக்கு மாகாணசபை அமைக்கப்பட்ட போது, அதன் இடைக்கால நிர்வாகியாக புலிகளால் பரிந்துரைக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய மக்கள் விரோதிகள்தான், தமது முன்னைய சகாக்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, மீண்டும் யாழ்.மாநகரசபையை இயங்கவிடாமல் சீர்குலைக்கும் கைங்கரியத்தில் அல்லும் பகலும் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ் மக்களின் முக்கியமான நகரான யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்தைச் சீர்குலைத்து அதனை இலங்கையின் தரம்கெட்ட நகரங்களில் ஒன்றாக மாற்றுவதின் மூலம், அரசின் மீது பழி சுமத்தி, "பாரீர்...பாரீர்...யாழ் நகரத்தை அரசு நடத்தும் விதத்தைப் பாரீர்" எனப் பிரச்சாரம் செய்வதே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் உள்ளாந்த நோக்கமாகும். அவர்களது இந்தக் கீழ்தரமான நோக்கத்தை தாயகத்திலும், புலம்பெயர் மண்ணிலும் வாழும் தமிழ் மக்கள் இணைந்து முறியடிக்க முன்வர வேண்டும்.
*

முன்பக்கத்தொடர்ச்சி...

உடைந்து இரா.சம்பந்தன் தலைமையிலான ஒரு குழுவினர் புலிகளின் பினாமிகளாக மாற, அவர்களுக்கு எதிரான குழுவினர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணி எனச் செயற்பட்டனர். அதன்பின்னர் யாழ்.மாநகரசபைத் தேர்தலில், அவர் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றிபெற்று, புலிகளால் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரனின் மனைவி சரோஜினி யோகேஸ்வரன் மாநகர முதல்வரானார். அவரையும் 1998 மே 17ம் திகதி புலிகள் சுட்டுப் படுகொலை செய்தனர்.

அதன்பின்னர், அவரது இடத்தை பொன்.சிவபாலன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி இட்டு நிரப்பியது. ஆனால் அவரையும் 1998 செப்ரெம்பர் 11ம் திகதி புலிகள் குண்டுவைத்துப் படுகொலை செய்தனர். புலிகளின் இந்தப் படுகொலைகளுக்கெல்லாம் சம்பந்தன் தலைமையிலான இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆசீர்வாதம் இருந்தது என்பது இரகசியமானது அல்ல. மக்களால் தெரிவு செய்யப்பட்ட இந்த மாநகர முதல்வர்களை, புலிகளும் அவர்களது பினாமிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் கொலை செய்ததின் நோக்கம், 'மக்கள் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன, எமக்கு எமது அரசியல் நலன்கள்தான் முக்கியமானவை' என்ற நிலைப்பாடு காரணமாகத்தான்.

இந்த வரலாற்றுத் தொடரில், 2009 ஆகஸ்ட் 8ம் திகதி புலிகளுக்கு எதிரான இறுதி யுத்த நடவடிக்கைகள் உக்கிரமடைந்திருந்த வேளையில், யாழ்.மாநகரசபைக்கும் வவுனியா நகரசபைக்கும் தேர்தல் நடாத்தப்பட்டது. இதில் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யாழ்.மாநகர சபை நிர்வாகத்தைக் கைப்பற்ற, வவுனியா நகரசபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது (புளொட் இயக்கம் அங்கு தனியாகப் போட்டியிட்டிருக்காவிட்டால், அதையும் கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருக்க முடியாது)

யாழ்.மாநகரசபையைக் கைப்பற்றிய பொதுசன ஐக்கிய முன்னணியினர், அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்புடன் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் படிப்படியாக நிறைவேற்றி வருகின்றனர். மறுபக்கத்தில் வவுனியா நகரசபையைப் பொறுப்பேற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமது குருட்டுத்தனமான அரச எதிர்ப்பு அரசியல் காரணமாக மக்களுக்கு எதையும் செய்யாமல் காலம் கடத்தியதுடன், அதிகாரத் துஸ்பிரயோகம், ஊழல்களிலும் ஈடுபட்டனர். இதனால் மக்கள் மத்தியில் மட்டுமின்றி, தமிழ் கூட்டமைப்பு நகரசபை உறுப்பினர்களிடமும் எதிர்ப்பு உருவாகி, அவர்களது நகரசபைத் தலைவர் நாதன் பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. உள்ளூராட்சி சபைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் ஒப்படைத்தால் என்ன நடக்கும் என்பதற்கு, வவுனியா நகரசபையில் அவர்களது நிர்வாகம் ஒரு உதாரணமாகும்.

இதனால் மக்கள் மத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீது உருவான அவநம்பிக்கையை திசை மாற்றுவதற்காக, யாழ்.மாநகரசபை நிர்வாகத்தை சீர்குலைக்கும் கைங்கரியத்தில் தமிழ் கூட்டமைப்பினர் தொடர்சசியாக ஈடுபட்டு வருகின்றனர். யாழ்.மாநகரசபை என்ன நடவடிக்கை மேற்கொண்டாலும், அதை கண்மூடித்தனமாக எதிர்ப்பதை அதன் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வழமையாகக் கொண்டுள்ளனர். அத்துடன் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணம் மீதும், அச்சபை நிர்வாகத்தை வைத்திருக்கும் ஈ.பி.டி.பி கட்சித் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதும், அவதூறுப் பிரச்சாரத்தையும் மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்த சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை இலவச விளம்பரம் செய்து வருகிறது. உதயன் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு சொந்தமானது. அவர் முன்னர் நடாத்திய 'சப்றா' என்ற நிதி நிறுவனம், யாழ்ப்பாண மக்கள் அந்நிறுவனத்தில் வைப்பிலிட்ட பல கோடி ரூபாய்களை ஏப்பம் விட்டதால், பலர் தற்கொலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஈ.பி.டி.பி உட்பட பலரும் இதனை அம்பலப்படுத்தியதால் கொதிப்படைந்த சரவணபவன், ஈ.பி.டி.பியையும் அதன் தலைவரையும் தாக்குவதிலேயே தனது முழு நேரத்தையும் செலவிட்டு வருகின்றார்.

யாழ்.மாநகரசபையைச் சீர்குலைக்க முயலும் இன்னொருவர், யாழ்.மாகரசபையின் முன்னாள் ஆணையாளரான சீ.வி.கே.சிவஞானம் ஆகும். இவர் மாநகரசபை விசேட ஆணையாளராக இருந்த காலத்தில் எதேச்சாதிகாரமாகச் செயல்பட்டதுடன், பல முறைகேடுகளிலும் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டவர். குறிப்பாக இவரது காலத்தில் உருவாக்கப்பட்டு பின்னர் பயன்படுத்தாமல் கைவிடப்பட்ட, பண்ணையில் கட்டப்பட்ட தூர இடங்களுக்கான பஸ் நிலையம், மாநகரசபைக்கு பின்னால் கடற்கரையில் அமைக்கப்பட்ட பூங்கா என்பனவற்றில் பண மோசடி செய்யப்பட்டதாகப் புகார்கள் எழுந்தன.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# சுயங்களும் நிஜங்களும்

✷ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தராவதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்து ஏமாந்து போன பேராசிரியர் ரட்ணஜீவன் கூல், தன்னை அந்தப் பதவியில் அமர்த்துவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றும், அதற்குக் காரணம் யாழ்ப்பாணத்தை புலிகளைப் போல ஆட்சி புரிந்து வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தான் என்றும், குறை கூறியுள்ளார்.

பேராசிரியர் கூல் கூறுவது உண்மையானால்(!?) அது வருந்தத்தக்கது என்பதுடன், உப வேந்தர் தெரிவுக்கென தேர்தல் நடைமுறையொன்று இருக்கையில், தனிப்பட்ட நபர்களின் விருப்புகளுக்காக ஜனாதிபதி வாக்குறுதிகளை எவ்வாறு வழங்குவார் என்ற கேள்வியும் எழுகின்றது. அத்துடன் ஜனாதிபதிக்கு இப்பொழுது இருக்கும் பிரச்சினைகள் போதாதென்று, 'தமிழ் மக்களுக்கு எதிராக அவர் இழைத்து வரும் அநீதிகளில்' ஒன்றாக, ரட்ணஜீவன் கூலை உப வேந்தராக நியமிக்காததும் சேர்ந்து கொண்டால், எத்தகைய பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதையும் அவர் எண்ணிப்பார்த்தால் நன்று!

✷ கே.பி. என்றழைக்கப்படும் புலிகளின் முன்னாள் சர்வதேச ஆயுதக் கடத்தல்காரரான குமரன் பத்மநாதன், இந்திய ஊடகங்களுக்கு அண்மையில் வழங்கிய பரபரப்பான செய்தியையொட்டி கருத்து வெளியிட்ட தமிழகத்தின் புதிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, தன்னையும் புலிகள் பல தடவைகள் கொல்ல முயன்றதாக வெளியிட்ட செய்தி, புலம்பெயர் புலித் தம்பிமார் ஜெயலலிதா மீது கட்டியிருந்த கற்பனைக் கோட்டைகளைத் தவிடுபொடியாக்கி விட்டுள்ளது.

இதுபற்றி 2011 மே 25ம் திகதி செய்தி வெளியிட்ட கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கே.பியின் பேட்டியின் பின்னணியில், இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக ஜெயலலிதாவைத் திருப்பி விடும் இந்திய உளவு அமைப்பான 'ரோவின்' பின்னணி இருப்பதாக, 'இந்தியச் செய்திச் வேவை' சொன்னதாகக் கூறியது.

இதனால் அதன் நேயர்கள் குழம்பிப் போய், “இந்தியாவில் நூற்றுக்கணக்கான செய்திச் சேவைகள் இருக்கையில், இது எந்தச் செய்திச் சேவை என்பதை விள்க்கமாக அல்லவா சொல்ல வேண்டும், அப்படியில்லாமல் மொட்டையாகச் சொன்னால், வழமையாக ஊடகங்கள் செய்யும் 'உல்டா' திருவிளையாடலான, 'நம்பிக்கையான வட்டாரம் சொன்னது, 'தகவல் அறிந்த வட்டாரம் சொன்னது, ''உள் வட்டாரங்கள் தெரிவித்தன', 'என்று கூறப்படுகிறது' போல அல்லவா இதையும் கருதவேண்டியுள்ளது” என்கின்றனர். இது 'தம்பிமாரின்' விருப்பத்துக்காக 'கிருஸ்ணனின்' லீலையாக இருக்கலாமோ என்றும் அங்கலாய்க்கிறார்கள்.

✷ தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு இடையிடையே சுடலை ஞானம் பிறப்பது வழமைதான் எனினும், அக்கூட்டமைப்பில் புதிது புதிதாக சரவெடிகளை வீசுவதில் வல்லவரான பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழர் பிரச்சினை பற்றி சீனாவுடனும் ரஸ்யாவுடனும் பேசப்போவதாய் 'லேட்டஸ்ராக' சொல்லப்போக, அரசியல் நாரத வேலையில் பகாசுரர்களான பி.பி.சி தமிழ் சேவை, “ஏன் உங்களுக்கு இந்தியா மீது நம்பிக்கை விட்டுப்போய்விட்டதா?” எனக் கேட்டது. திணறிப்போன சுரேஸ், “இல்லையில்லை இந்தியா தான் எமது ஆத்மார்த்த நண்பன், ஆனால் எமக்கு எதிராக இருந்த நாடுகளுக்கும் (அதாவது சீனாவும் ரஸ்யாவும்) எமது பிரச்சினையைச் சொல்வதற்கே இந்த முயற்சி” என 'விளக்கி' தப்பித்துக் கொண்டார்.

பின்னர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்தியாவும் அமெரிக்காவும் தான் தமது மிக நெருக்கமான நண்பர்கள் என்று சொல்லி, 'மேலதிக விளக்கம்' வேறு கொடுக்க வேண்டி ஏற்பாட்டாலும், தங்கள் 'நிலைப்பாடு' எது என்ற உண்மையைக் கக்கி, தமது அரசியலின் நதி மூலம் ரிசி மூலம் எதுவென்பதை உடைத்து விட்டதற்காக, இந்த கூட்டமைப்பு எம்.பிக்கள் இருவருக்கும் நன்றி சொல்லத்தான் வேண்டும்!
*

ஈராக் அழிந்து சிதைந்த பிறகுதான் தெரிந்தது
பேரழிவு ஆயுதங்கள் எவர் கையில் இருந்ததென்பது?
- மு. மேத்தா